# قصيدة الخَمْرِيَّة

கஸீதா خَمْرِيَّة என்பது கௌதுல் அஃலம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் பாடிய பைத்தாகும். இதை வழக்கமாக ஓதிவருபவர்க்கு அதிகமான பிரயோஜனங்கள் கிடைக்கும்.

1. இதை ஒவ்வொரு நாளும் 11 பதினோரு தடவை நேமமாக ஓதி வருபவர், அவர் படைப்பினங்களிடத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டவர் ஆவார்.
2. இதை ஒரு மனிதர் அவருடைய ஓதிவரும் அவ்ராதாக ஆக்கிக் கொண்டால், அதை ஓதியவருக்கும், அதை ஓதக் கேட்டவருக்கும் சக்தி வாய்ந்த மனனம் அதிகமாகும். மறதி வராது.
3. இதை ஓதுபவருக்கு, அரபியில் விளக்கம் அதிகமாகும். அவர் விளக்கமுடையவனாக இல்லை என்றாலும் சரியே.
4. சுத்தமான எண்ணம் கொண்டு இதை ஓதினால் அவனுடைய நாட்டம் நிறைவேறும். இதை 40 நாட்கள் தொடர்ந்து ஒரு தேவையை நாடி ஓதினால், அல்லாஹ்வுடைய அனுமதியைக் கொண்டு அத்தேவை பூர்த்தியாகும்.
5. இந்த கஸீதாவை சுமந்தவர் இன்னும் ஒவ்வொருநாளும் மூன்று தடவை ஓதியவர் அல்லது அதை ஓதக் கேட்டவர்(அவர் அல்லாதவனிடம் ஓதக் கேட்டவர்), அதை ஒவ்வொரு நாளும் நல்ல எண்ணத்தோடு நோட்டமிட்டு பார்த்தவர் அல்லாஹ் நாடினால் அதை இயற்றிய கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை கனவில் காணுவார். அவர்களுடைய ஜியாரத்தைக் கொண்டு பரக்கத் பெறுவார். அவர்களுடைய பேச்சைக் கொண்டும் பரக்கத் பெறுவார். இன்னும் அவர் அரசர்களிடமும், தலைவர்களிடமும் கண்ணியமாக்கப்படவராவார்.

**ஓதும் முறை:**

இதை ஓத நாடினால் முதலாவதாக ஸூரத்துல் பாத்திஹாவை ஓதி கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஹத்யா செய்யவும். பிறகு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பெயரில் கீழ்காணும் ஸலவாத்தை மூன்று தடவை ஓத வேண்டும்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ مَعْدَنِ الْجُوْدِ وَالْكَرَمِ مَنْبَعِ الْعِلْمِ وَالْحِلْمِ وَالْحِكَمِ وَبَارِكْ وَسَلِّمْ۔

❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁

## قصيدة الخَمْرِيَّة

سَقَانِي الْحِبُّ كَاسَاتِ الْوِصَالِ فَقُلْتُ لِخَمْرَتِي نَحْوِيْ تَعَالِيْ

سَعَتْ وَمَشَتْ لِنَحْوِيْ فِيْ كُؤُسٍ فَهِمْتُ بِسُكْرَتِيْ بَيْنَ الْمَوَالِيْ

ஹழ்ரத் கௌதுல் அ‌ஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள்: “அல்லாஹ் அளவில் சேர்மானம் என்னும் உஸூலை - குடிப்பை எனது பிரியமாக்கப்பட்ட ரப்பு எனக்கு புகட்டி வைத்தான். அப்போது என்னுடைய ஆசையெனும் மதுபானம் என்கிற கள்ளை நோக்கி நான் சொன்னேன் எனக்கு நேராக நீ வந்து சேரு என்கிறதாக அதற்கு சொன்னேன் கூப்பிடவே அந்த ஆசையெனும் கள்ளாகிறது குவலைகளுக்கு உள்ளே தரிபட்டதாக அது ஓட்டமும் நடையுமாக என்னளவிலே வந்து சேர்ந்தது. அப்போது நான் அந்த குடிப்பை குடித்து மஸ்திலாகி அந்த மஸ்த்துடனே ஹக்குடைய சமூகத்திற்கு நேராக நான் போய் சேர்ந்தேன்.

فَقُلْتُ لِسَائِرِ الْاَقْطَابِ لُمُّوْا بِحَانِيْ وَادْخُلُوْا اَنْتُمْ رِجَالِيْ

وَهِيْمُوْا وَاشْرَبُوْا اَنْتُمْ جُنُوْدِيْ فَسَاقِي الْقَوْمِ بِالْوَافِيْ مَلَالِيْ

குதுபுமார்கள் அடங்களும் நான் கூப்பிட்டுச் சொன்னேன்: “நீங்கள் எல்லோரும் ஆசையெனும் கல்லுக்கிடையில் வந்து புகுதுங்கள். நீங்களாகிறது என்னுடைய மனிதர்களாக இருக்கும். இன்னும் நீங்கள் என்னளவில் ஆசை கொண்டவர்களாக வந்து நான் உங்களுக்குத் தருகிற ஆசையெனும் மதுபானத்தை வாங்கி குடித்து கொள்ளுங்கள். நீங்களாகிறது எனது சேவகர்களாக இருக்கும். ஒவ்வொரு நபிமார்கள் கூட்டங்கள் ஒவ்வொரு ஒலிமார்கள் கூட்டங்கள் இஷ்க்கெனும் கள்ளை குடிப்பாட்டுகின்றவன் அவர்களுடைய குடிப்புகளைக் காண தெளிவாகிய மேலான குடிப்பை எனக்கு நிரப்பமாக புகட்டி வைத்தான்.

شَرِبْتُمْ فَضْلَتِيْ مِنْ بَعْدِ سُكْرِيْ وَلَا نِلْتُمْ عُلُوِّيْ وَاتِّصَالِيْ

مَقَامُكُمْ عُلَا جَمْعًا وَلٰكِنْ مَقَامِيْ فَوْقَكُمْ مَازَالَ عَالِيْ

اَنَافِيْ حَضْرَةِ التَّقْرِيْبِ وَحْدِيْ يُصَرِّفُنِيْ وَحَسْبِيْ ذُوالْجَلَالِ

நான் குடித்து மிஞ்சின குடிப்பை குடித்தீர்கள். நீங்கள் என்னுடைய மேம்பாட்டை என்னுடைய சேர்மானத்தை நீங்கள் பெற்றுக் கொண்டவர்கள் இல்லை. உங்களுடைய மகாமாகிறது எல்லா வலிமார்களுடைய மகாமைக் காண உயர்த்தியானதாய் இருக்கும். ஆயினும் என்னுடைய மகாம் உங்களினுடைய மகாமுக்கெல்லாம் மேலானதாய் இருக்கும். இன்னும் மகாமாகிறது கியாமத்து நாள் பரியந்தம் உயர்ந்த மர்த்தபாவில் வளர்ந்தேறினதாக இருக்கும். இன்னும் நானாகிறது தனித்தவனாக ஹக்குடைய சமூகத்தளவில் முடுகுதலாகி இருந்தேன். அப்போது



www.sufimanzil.org

அல்லாஹ் வலிமார்கள் அடங்களுக்கும் கொடுக்கப்பட்ட விலாயத்துடைய விஷயங்கள் அடங்களையும் என் கைவசமாக்கித் தந்தான். என்னுடைய ரப்பாகிறவன் எனக்கு போதுமானவனாக இருக்கும். இன்னும் அந்த நாயனாகிறவன் வலுப்பமான ஹக்கானவனாக இருக்கும்.

أَنَا الْبَازِيُّ أَشْهَبُ كُلِّ شَيْخٍ　　　وَمَنْ ذَافِي الرِّجَالِ أُعْطِيْ مِثَالِيْ

دَرَسْتُ الْعِلْمَ حَتَّي صِرْتُ قُطْبًا　　　وَنِلْتُ السَّعْدَ مِنْ مَوْلَي الْمَوَالِيْ

முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்: "நான் ஒலிமார்களுக்கெல்லாம் ராஜாளிக் குருவியாக இருக்கும். அந்தந்த பேர்கள் உடையவர்கள் அடங்களும் தரீக்கின் வழிமுறையைப் பார்த்து நடத்தி வைக்கிறது. எனது வெளிச்சம் கொண்டதாய் இருக்கும். நான் அவர்களுக்கெல்லாம் ஒளிவீசுகின்ற பந்தம் போலானவனாய் இருக்கும். வலிமார்கள் யாருக்கு கொடுக்கப்பட்டது என்னைப் போல் ஒருவருக்கும் கொடுக்கப்பட்டதும் இல்லை. இன்னும் நானாகிறது குத்புல் அக்தாப் ஆகும் வரைக்கும் இல்மு அடங்களையும் பாடமிட்டுக் கொண்டேன். இன்னும் நானாகிறவன் ரப்படங்களுக்கும் ரப்பாகிய ஹக்கு அல்லாஹுத்தஆலாவில் நின்றும் சீதேவிதனங்களெல்லாம் பெற்றுக் கொண்டேன்.

كَسَانِيْ خِلْعَةً بِطِرَازِ عَزْمٍ　　　وَتَوَّجَنِيْ بِتِيْجَانِ الْكَمَالِ

وَاَطْلَعَنِيْ عَلٰي سِرٍّ قَدِيْمٍ　　　وَقَلَّدَنِيْ وَاَعْطَانِيْ سُؤَالِيْ

طُبُوْلِيْ فِيْ السَّمَا وَالْاَرْضِ دُقَّتْ　　　وَشَاؤُسُ السَّعَادَةِ قَدْ بَدَالِيْ

அல்லாஹ்வாகிறவன் தன் சமூகத்தில் நின்றும் நல்கருத்தென்னும் சுற்றுகளை வைக்கப்பட்ட விலைமதிக்க முடியாத உடுப்பை எனக்கு உடுத்தாட்டி வைத்து நிரப்பம் என்கிற நவரத்தினமுள்ள கிரீடத்தை என் சிரசின் மீது வைத்தான். இன்னும் எனது ரப்பாகிய நாயகன் தன் பூர்வீகமாகிய ரகசிய பொருள்களை எனக்கெடுத்து காட்டினான். மற்றும் ஒலிமார்கள் அடங்களுக்கும் என் சொல்படி நடக்க கட்டளையிட்டான். அல்லாஹ்வாகிறவன் கேட்டதை எல்லாம் எனக்குத் தந்து உதவி செய்தான். இன்னும் கீர்த்தியென்னும் ஏழு வாத்தியாயங்களாகிறது பூமி உலகிலும், வானலோகம் அடங்களிலும் அடிக்கப்படுகிறது. சீதேவித்தனமென்னும் சங்கு ஊதப்படுகிறது. எனக்கு ஒளியாக காட்டப்பட்டது.

أَنَا الْحَسَنِيُّ وَالْمِخْدَعُ مَقَامِيْ　　　وَاَقْدَامِيْ عَلَي عُنُقِ الرِّجَالِ

وَوَلَّانِيْ عَلَي الْاَقْطَابِ جَمْعًا　　　فَحُكْمِيْ نَافِذٌ فِيْ كُلِّ حَالِ

நான் ஹஸன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய வம்சத்தில் உள்ளவனாக இருக்கும். அவ்லியாக்கள் குத்புமார்கள் அடங்களும் போய் புகுதுகிறதற்கு சக்தி பெற மாட்டார்களே அப்படிப்பட்ட மிகுதஅ என்று சொல்லப்பட்ட மகாமாகிறது என்னுடைய மகாமாக இருக்கும். என்னுடைய பாதமாகிறது அவ்லியாக்களுடைய தோளின் மேலே இருக்கும். இன்னும் எனது ரப்பானவன்

குதுபுமார்கள் அடங்களுக்கும் என்னை அரசனாக்கி வைத்தான். ஆதலால் என்னுடைய ஹுக்குமாகிறது காலமடங்களிலேயும் நேரமடங்களிலேயும் செல்லுபடியாகி எங்கும் அது தரிபட்டிருக்கிறது.

نَظَرْتُ اِلَي بِلَادَاللهِ جَمْعًا ... كَخَرْدَلَةٍ عَلَي حُكْمِ اتِّصَالِيْ

وَلَوْ اَلْقَيْتُ سِرِّيْ فَوْقَ نَارٍ ... لَخَمِدَتْ وَانْطَفَتْ مِنْ سِرِّ حَالِيْ

இன்னும் அல்லாஹ் உண்டாக்கின பட்டணம் அடங்களிலேயும் நான்நோட்டமிட்டு பார்த்து என்னுடைய சேர்மானமென்னும் ஹுக்மின்படிக்கு அந்த பட்டணங்களாகிறது ஒரு சின்ன கடுகுபோலவே தோத்திரம் ஆச்சுது. நான் என்னுடைய ரகசியப் பொருளை நரகத்தின் மீது எடுத்துப் போட்டேனேயானால் நரகம் அடங்களும் என் ஹாலின் ரகசியத்தை பொருளுடைய வலுப்பத்தினாலே நூர்ந்து சாம்பலாகிவிடும்.

وَلَوْ اَلْقَيْتُ سِرِّيْ فَوْقَ مَيْتٍ ... لَقَامَ بِقُدْرَةِ الْمَوْلَي مَشَالِيْ

وَلَوْ اَلْقَيْتُ سِرِّيْ فِيْ جِبَالٍ ... لَدُكَّتْ وَاخْتَفَتْ بَيْنَ الرِّمَالِ

وَلَوْ اَلْقَيْتُ سِرِّيْ فِيْ بِحَارٍ ... فَصَارَ الْـكُلُّ غَوْرًا فِي الزَّوَالِ

இன்னும் என்னுடைய ரகசியப் பொருளை அழிந்துப் போன மய்யித்தின் மீது போட்டேனேயானால் அந்த செத்த மய்யித்தாகிறது அல்லாஹ்வுடைய தத்துவம் கொண்டு எழும்பி என்னளவிலே கால்நடையாக நடந்துவரும். இன்னும் என்னுடைய ரகசியப்பொருளை மலைகள் அடங்களும் போட்டேனே ஆனால் அந்த மலைகள் அடங்களும் நொறுங்கி சுக்குநூறாகி மறைந்துவிடும். இன்னும் எனது ரகசியத்தை ஏழு கடலிலும் எடுத்தூதப்பட்டோமானால், பட்டப்பலிலேயே கடல்கள் அனைத்தும் தண்ணீரிலில்லாமல் வத்திப் போகும்.

وَمَا مِنْهَا شُهُوْرٌ اَوْدُهُوْرٌ ... تَمُرُّ وَتَنْقَضِيْ اِلَّا اَتَانِيْ

وَتُخْبِرُنِيْ بِمَا يَأْتِيْ وَيَجْرِيْ ... وَتُعْصِمُنِيْ فَاُقْصُرْ عَنْ جِدَالِيْ

உலகை மடக்கி மடக்கி வருகிற மாதங்களும் வருடங்களும் வருகிறதில்லை. அது என்னளவிலே வந்து அது களிலேயே புதுசு புதுசாக நடக்கிற விசயங்கள் அடங்களையும் எனக்கு அறிவித்து அல்லாமல் அவன் அறியாத எந்த விசயமும் உலகத்திலேயே யாதொன்றும் கிடையாது. ஆதலால் என்னுடனே தர்க்கம் பேசுகிறவன் மனிதனே நீ தர்க்கம் பேசுவதை விட்டும் உன் நாவை அடக்கிக் கொள்.

بِلَادُاللهِ مُلْكِيْ تَحْتَ حُكْمِيْ ... وَوَقْتِيْ قَبْلَ قَبْلِيْ قَدْصَّفَالِيْ

مُرِيْدِيْ لَاتَخَفْ وَاشٍ فَاِنِّيْ ... عَزُوْمٌ قَاتِلٌ عِنْدَ الْقِتَالِ

அல்லாஹ்தஆலாவால் படைக்கப்பட்ட பட்டணங்கள் அடங்களும் என்னுடைய ஆட்சிக்குள்ளாக இருக்கும்.அது என்னுடைய சட்டங்கள் அதிலே அடங்கியதாய் இருக்கும். இன்னும் என்னுடைய வுஜூத் நான் உண்டாயிருக்கிறது

வெளிப்படுகிறதுக்கு முன்னாலேயே முன்னாலுக்கு முன்னால் என் விசயங்களை வக்து எனக்கு மிகவும் தெளிவானதாகயிருந்தது. என் தரீகில் என் வழியில் உபதேசம் பெற்றுக் கொண்ட என் முரீதே! முரீதாகிற நீ கோள் சொல்லுகின்றவனுடைய கோளுக்கு பயப்படாதே. திட்டமாக நானாகிறது உன்னளவில் கிருபையானவனாக இருக்கும். உன் பகைவர்கள் உன்னுடனே சண்டை செய்வார்கேளேயானால் அவர்களோடு நான் சண்டை செய்வதாக இருக்கும்.

مُرِيْدِيْ لَاتَخَفْ اَللهُ رَبِّيْ    عَطَانِيْ رِفْعَةً نِلْتُ الْمَعَالِ

مُرِيْدِيْهِمْ وَطِبْ وَاشْطَحْ وَغَنِّ    وَافْعَلْ مَاتَشَا فَالْاِسْمُ عَالِ

وَكُلُّ وَلِيٍّ لَهُ قَدَمٌ فَاِنِّيْ    عَلَي قَدَمِ النَّبِيْ بَدْرِ الْكَمَالِ

என்னுடைய முரீதுகளே! இன்காறு செய்யக்கூடியவர்களை விட்டும் பொறாமை காரனுடைய ஹஸதை தொட்டும் நீ பயப்பட வேண்டாம். அல்லாஹ் தஆலா நமக்கு போதுமான ரப்பாக இருக்கும். அந்த ரப்பாகிறவன் உயர்த்தியான கருமமெல்லாம் தந்திருக்கிறான். நான் ஹக்கு தஆலாவினின்றும் மேன்பாடுகளிலெல்லாம் நான் பெற்றுக் கொண்டேன். என்னுடைய முரீதே! நீ இஷ்கை தேடி மனம் போனபோக்கில் நடந்து கொள். இன்னும் என்னுடைய தரீகை மனசந்தோசமாக எடுத்து நடந்து கொள். இன்னும் என் புகழை நீ புகழ்ந்து ராகம் பாடி ஆனந்தமாடும் நீ நாடின கருமமெல்லாம் செய்து கொள். ஆதலால் என்னுடைய திருநாமமாகிறது வலிமார்கள்இ குதுபுமார்கள் அவர்கள் அஸ்மாக்களைக் காண உயர்ந்ததாகயிருக்கும். ஒவ்வொரு ஒலிமார்கள் அடங்களும் ஒவ்வொரு நபிமாருடைய பாதத்தின் மீதிலே தரிபட்டிருக்கிறார்கள். நானாகிறது என்னுடைய பாட்டனார் அவர்களாகிய முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய திருபாதத்தின் மீதிலே தரிபட்டேன். அவர்கள் நபிமார்கள், ரஸூல்மார்கள் அடங்களுக்கும் மேலானவர்கள். இன்னும் ஒளிவு பிரகாசிக்கிற பூரண சந்திரனைக் காண மிகவும் அழகானவர்கள். ஆதலால் என்னுடைய பாட்டனார்அவர்கள் அன்பியாக்களுக்கெல்லாம் மேலானவர்களாக இருந்தது போல நான் அவ்லியாக்களுக்கடங்களுக்கும் மேலானவனாக இருக்கும்.

اَنَاالْجِيْلِيُّ مُحْيِي الدِّيْنِ اِسْمِيْ    وَاَعْلَامِيْ عَلَي رَأْسِ الْجِبَالِ

وَعَبْدُ الْقَادِرِ الْمَشْهُوْرِ اِسْمِيْ    وَجَدِّيْ صَاحِبُ الْعَيْنِ الْكَمَالِ

இன்னும் என்னுடைய அடையாளங்கள் என்னும் கொடிகளாகிறது மலைகளையுடைய உச்சத்திலேயாயிருக்கும். ஜீலானென்னும் பதியிலுள்ளவன். முஹ்யித்தீன் என்னும் நாமமாகிறது என் பட்டப்பேராக இருக்கும். இன்னும் அப்துல்காதிர் என்னும் இஸ்மாகிறது உலகமடங்களிலும் பிரஸ்தாபமானதாக எனது பெயராக இருக்கும். என்பாட்டனார் அவர்கள் நிரப்பமாகிய தாத்துடைய நாயகமாக இருக்கும்.

www.sufimanzil.org